அ.வ.எண்.56/2020 நாள்: 27.01.2026

வா.சா.1 திருமதி. விஜயலெட்சுமி

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) தாவா சொத்தை கிரையம் கொடுத்த லெட்சுமிபதி என்பவரை ஏற்கனவே எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பு லெட்சுமிபதி நேரடியாக என்னை அனுகிறாரா என்றால் ஆமாம். கிரையம் பெறுவதற்கு முன்பு லெட்சுமிபதி என்னிடம் கிரையம் கொடுப்பதற்காக பேசினாரா என்றால் கிரையம் பெற்ற தேதியிலிருந்து 3 வருடங்களுக்கு முன்பு விற்பதாக தகவல் சொன்னார். கிரையம் பெற்ற சமயம் நான் லெட்சுபதியை தொடர்பு கொண்டேனா அல்லது அவர்தான் என்னை அனுகிறாரா என்றால அவர்தான் என்னை அனுகினார்.

2) லெட்சுமிபதியிடம் தாவா சொத்து வருவதற்கு முன்பு யாரிடம் இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், எனது அப்பா சொல்லி தெரியும் எனக்கு நேரடியாக தெரியாது. லெட்சுபதிக்கு கிரையம் கொடுத்தவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை லெட்சுமிபதி நேரடியாக கிரையம் செய்து கொடுத்தாரா அல்லது பவர் ஏஜென்ட் மூலம் கிரையம் செய்து கொடுத்தாரா என்றால் லெட்சுபதி நேரடியாக கிரையம் செய்து கொடுத்தார். தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை.

3) தாவா சொத்திற்கான மூலப்பத்திரம் என்னிடம் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி மூலப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். தாவா சொத்து வாங்குவதற்கு முன்பு வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை பெற்றேனா என்றால் இல்லை. பத்திரம் யார் எழுதினார் என்றால் ஆவண எழுத்தர் எழுதினார், அவர் ஏற்கனவே அறிமுகமானவரா என்றால் இல்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/ Vijayalakshmi

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.01.27 18:06:21 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU